# நல்லைக்குமரன் மலர்




## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு

### இதழ் 15

2007

திருமதி சாந்தினி அருளானந்தம் அவர்க

உ
சிவமயம்



# நல்லைக்குமரன் மலர் - 15

# 2007


பதிப்பாசிரியர் :
நல்லையா விஜயசுந்தரம்



**சைவசமய விவகாரக் குழு**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்**

# பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோற்றம்பெற்ற இந்து சமய நிறுவனங்கள்

திருமதி சாந்தினி அருளானந்தம்
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

19ஆம் நூற்றாண்டின் இந்துசமய வரலாற்றில் ஆறுமுகநாவலர் ஆளுமை மிக்க ஒருவராக விளங்கியதைக் காணலாம். பிரித்தானிய அரசின் ஆதரவு, அனுசரணை, பொருளாதாரபலம் முதலிய வற்றைக் கொண்டிருந்த அமைப்புக்களான மிசனரிச் சங்கங்களும், மனிதாபிமானம் கொண்டு தம் மதத்தைப் பரப்பும் மிசனரிமார்களும் மேற் கொண்ட தீவிரமான கிறிஸ்தவ சமயப் பரப்பு நடவடிக்கைகளுக்கு ஈடுகொடுத்து, சைவ சமயத் தைப் பாதுகாத்து அதனை நிலைநாட்டுகின்ற ஆளுமை நாவலரிடத்தே நிறைந்திருந்ததெனலாம். அவருடைய மறைவுக்குப் பின்னர் இத்தகையவோர் ஆளுமை மிக்க அறிஞர் எவரும் தோற்றம் பெற வில்லை. சேர். பொன்.இராமநாதன் தனது சட்டசபை வாதம் ஒன்றின் போது ஆறுமுகநாவலரின் மறைவி னால் கிறிஸ்தவ மிசனரிகளின் சமயம் பரப்பும் வேகம் அதிகரித்ததைச் சுட்டிக் காட்டியுள்ளமை நாவலர் ஆளுமையை விளங்கிக் கொள்ள துணை யாகின்றது.

## நாவலர் கால நிறுவன அமைப்புக்கள்

கிறிஸ்தவ சமயப் பரப்பு நடவடிக்கைகளினால் ஏற்பட்ட சவால்களை எதிர்கொள்வதற்கும் இந்து சமயத்தைத் தொடர்ந்தும் ஸ்திர நிலையில் வைத்திருப்பதற்கும் நிறுவன அமைப்பு அவசியம் என்ற சிந்தனை நாவலரின் அபிமானிகளால் உணரப்படுகின்ற சூழ்நிலை, நாவலரின் மறை வினைத் (1879) தொடர்ந்து தோற்றம் பெற்றது. ஆயினும் இந்நிறுவன அமைப்புக்குரிய அடிப்படையை இட்டுக் கொடுத்தவரும் நாவலரே என்பதனை த.கைலாசபிள்ளை எடுத்துக்காட்ட முற்படுவதைக் காணலாம். நாவலர் காலத்தில் அவரால் நிறுவன மொன்று ஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

> **“மிசனரிச் சங்கங்களின் பணிகளையும் பிரம்ம சமாஜத்தின் ஆற்றல்களையும் நன்கு மனங் கொண்ட நாவலரவர்கள் தாம் வழிநடத்திச் செல்லும் இயக்கம் நிறுவன அமைப்புடையதாய் அமைதல் வேண்டுமென்று கருதினார். இதனால் 1854ஆம் வருடம் தை மாதம் ஸ்ரீ வேதாகமோக்த சைவப்பிரகாச சமாசீய விக்கியாபனம் என்னும் பெயருடன் ஒரு பிரசுரத்தை வெளியிட்டார். அப்பிரசுரத்தின் மூலம் நாவலரவர்கள் அமைத்த நிறுவனத்தின் பெயர், இலட்சியம், நோக்கம், செயற்பாடு என்பனவற்றை அறிந்து கொள்ள முடிகின்றது. இந்நிறுவனத்தின் பெயர் ஸ்ரீ வேதாக மோக்த சித்தாந்த சைவப்பிரகாச சமாசீயம் என்ப தாகும்.”**

இதிலிருந்து நாவலரால் உருவாக்கப்பட்ட நிறுவனம் பற்றி அறிந்து கொள்ளலாம். இந்நிறு வனத்தின் உருவாக்கத்தில் இந்திய இந்துமத சீர்திருத்த, மறுமலர்ச்சி இயக்கங்களின் செயற்பாடு களும், அவற்றால் இந்து சமயம் எய்திய வளர்ச்சி நிலைகளும் முக்கிய பங்கு வகித்ததைக் காணலாம். அத்துடன் இந்து சமய வீழ்ச்சியையும், கிறிஸ்தவ சமயத்தின் பரவலையும் நோக்கமாகக் கொண்டு செயற்பட்ட கிறிஸ்தவ நிறுவன அமைப்புக்க ளையும் நாவலர் கவனத்திற் கொள்வதற்கு நிறைந்த சந்தர்ப்பங்களும் கிடைத்தன. இவற்றின் விளைவாகவே ஈழத்திலும் சைவசமய வளர்ச்சியின் பொருட்டு முதன்முதலில் நிறுவனமொன்று நாவலரால் தோற்றுவிக்கப்பட்டதெனலாம்.

ஸ்ரீ வேதாகமோக்த சித்தாந்த சைவப்பிரகாச சமாசீயத்தின் உருவாக்கத்தையடுத்து 1864இல் சங்கர பண்டிதர் தலைமையில் ‘பரமத கண்டன சுயமத ஸ்தாபன சங்கம்’ என்ற நிறுவனம் உருவாக் கப்பட்டதாக அறிய முடிகின்றது. ஆனால் இது சங்கர பண்டிதரால் ஸ்தாபிக்கப்படவில்லை என்றும் நாவலர் உருவாக்கிய சைவப்பிரகாச சமாசீயமே அவர் தமிழ் நாட்டில் இருந்த கால கட்டத்தில் சங்கர பண்டிதர் தலைமையில் புனரமைப்புச் செய்யப்பட்டுப் புத்துயிர்ப்புப் பெற்றதெனக்

கனகரத்தினம் வலியுறுத்துகின்றார். எவ்வாறாயினும் கிறிஸ்தவத்தின் செல்வாக்கிலிருந்து இந்து

பத்தைப் பாதுகாக்கும் பொருட்டும், இந்து சமய வளர்ச்சியின் பொருட்டும் நிறுவன ரீதியான செயற்பாடுகள் நாவலர் காலத்திலேயே தொடங்கி விட்டதென்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

## நாவலரின் மறைவுக்குப் பின் தோன்றிய நிறுவனங்கள்

### சைவப்பிரகாச சமாசீயம்

1879ஆம் ஆண்டு நாவலர் மறைந்த பின் நிறுவன ரீதியான செயற்பாடுகளே இந்து சமயத்தின் வளர்ச்சிக்குத் துணை செய்யும் என்பதை நன்குணர்ந்த ஈழத்து இந்து சமய அறிஞர்கள் ஒன்றிணைந்து நிறுவனமொன்றை அமைத்தனர். இதில் நாவலரின் மாணவர்களும் அவரது அபிமானிகளும் பிரதான பங்கு வகித்தனர். இவர்களின் முயற்சி குறித்து இந்து சாதனம் பத்திரிகை பின்வருமாறு குறிப்பிடுகின்றது :

**''........ ஆகிய பதின்மூவர் நாவலர் பெருமானின் பணிகளை தனித்து ஒருவராலும் பணிபுரிய முடியாது எனக் கருதி ஒன்று ஒரு சபையாக இயங்குவதெனத் தீர்மானித்தனர். பதின்மூவரும் சைவப்பிரகாச சமாசீயம் என்னும் பெயரில் ஒரு சபையை உருவாக்கினர்.''**

சைவப் பிரகாச சமாசீயம் நாவலரது பணிகளை முன்னெடுப்பதனையே நோக்கமாகக் கொண்டியங்கியது. நாவலரால் அமைக்கப்பட்ட நிறுவனத்தின் பெயரின் பிற்பகுதி இந்நிறுவனத்தின் பெயராக அமைந்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

### கிறிஸ்துமத கண்டனசபை

இந்துக்களை மதம் மாற்றுவதில் கிறிஸ்தவ மிசனரிகள் முழுமூச்சாகச் செயற்பட்டனர். அது மட்டுமல்லாது இந்து அறிஞர்களை வாதத்திற்கு அழைப்பதிலும் முன்னின்றனர். நாவலர் காலத்தில் பரமத கண்டன சுயமத ஸ்தாபன சங்கம் செயற்பட்டதைப் போன்று 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிறிஸ்துமத கண்டன சபை செயற்பட்டதெனலாம். 1887ஆம் ஆண்டு இச் சபையை நிறுவுவதில் த.கைலாசபிள்ளை, இ.மாரிமுத்துப்பிள்ளை, ந.ச.பொன்னம்பலபிள்ளை, வை.சுப்பிரமணிய பிள்ளை, சுவாமிநாத பண்டிதர் போன்றோர் பங்களிப்புச் செய்திருந்தனர். இச் சபையின் அங்கத்தவர்கள் கிறிஸ்தவர்களின் கண்டனங்களை எதிர்கொள்ளல், இந்துக்களிடையே சமய உண்மைகளை நிலை நாட்டுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டு சமகால இந்து சமய வளர்ச்சிக்குத் துணை நின்றனர்.

### கொழும்புசைவ பரிபாலனசபை

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்னிலங்கையின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு அம்சங்களில் வடபகுதித் தமிழர்கள் செல்வாக்குப் பெறத் தொடங்கினர். தென்னிலங்கையில் பூர்ஷ்வாக்களின் தோற்றம் பற்றி ஆராய்ந்த குமாரி ஜெயவர்த்தனா அப்பிரதேசத்தில் தமிழர்கள் எவ்வெவ் வழிகளில் செல்வாக்கைப் பெற்றனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றார். இப்பின்னணியில் யாழ்ப்பாணம் முதலிய பிரதேசங்களிலிருந்து சென்றவர்களும் தமிழகத்தில் இருந்து வந்தவர்களும் (செட்டிகள், தொழிலாளர்கள்) தென்பகுதியில் இந்துசமய பண்பாட்டு வாழ்வினை வளப்படுத்தினர். இதனுடைய பரிணாமமாகக் கொழும்பு போன்ற இடங்களில் பரவியிருந்த இந்துக்களின் சமய வாழ்வினை மேம்படுத்தும் பொருட்டு பல இந்துசமய நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. இவற்றிலொன்றே கொழும்பு சைவ பரிபாலன சபையாகும். இச் சபை 1887ஆம் ஆண்டு இலங்கை சைவபரிபாலனசபை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டியங்கியது. சேர். பொன்.இராமநாதனின் சகோதரரான குமாரசாமி முதலியார் யாழ்ப்பாண சைவபரிபாலன சபையின் தலைவராக மட்டுமன்றி இலங்கைச் சைவபரிபாலன சபையின் தலைவராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

### தம்பையா முதலியார் சத்திரம்

கொழும்பில் சைவசமயப் பணிகளில் ஈடுபட்ட இன்னொரு இந்து நிறுவனமாக தம்பையா முதலியார் சத்திரத்தை அடையாளம் காணலாம். இந் நிறுவனம் இந்து யாத்திரிகர், வியாபாரிகள் (செட்டிகள்) மற்றும் பலருக்குரிய தர்ம ஸ்தாபனமாக விளங்கியது. தம்பையா முதலியார் என்பவர் 30,000 ரூபா செலவில் 1880ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் மேற்படி சத்திரத்தை நிறுவினார்.

### யாழ்ப்பாண சைவபரிபாலன சபை

கொழும்பை மையமாகக் கொண்டு இலங்கை சைவபரிபாலனசபை நிறுவப்பட்டவாறு பெரும்பான்மையாக இந்துக்கள் வாழும் யாழ்ப்பாணத்திலும் ஒரு சபை நிறுவப்பட்டது. யாழ்ப்பாண சைவ

பரிபாலனசபை எனப்பட்ட இச்சபை ஸ்திரமான இன்று வரை இயங்கி வருகின்ற நிறுவனம் என்ற பெருமைக்குரியதாகும். ஆறுமுகநாவலர் மறைந்து ஒன்பது ஆண்டுகளின் பின்பு உதயமான இச்சபை ஆரம்பத்தில் யாழ்ப்பாண சைவசமய பரிபாலன சபை என்றே அழைக்கப்பட்டதாக தெரிகின்றது. இதன் முதலாவது தலைவராக நாவலரின் மருமகனும், மாணாக்கனுமாகிய ந.ச.பொன்னம்பலபிள்ளை தெரிவானார். நாவலரின் தமையனாரின் புதல்வனும், மாணாக்கனுமாகிய த.கைலாசபிள்ளை செயலாள ராக நியமிக்கப்பட்டார். சபாபதிச் செட்டியார் பொருளாளராகவும், நிர்வாக அங்கத்தவர்களாக 19 பேரும் தெரிவாகினர். இவர்களிற் பெரும்பாலான வர்கள் நாவலரின் உறவினராகவோ அன்றில் அவரது மாணவர்களாகவோ விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

சைவ பரிபாலனசபை இந்துசமய விருத்தியின் பொருட்டுப் பல மாகாணசபைக் கூட்டங்களையும் அதிகார சபைக் கூட்டங்களையும் நடாத்திப் பல்வேறு பணிகளை முன்னெடுத்தது. 17.09.1890 இல் நடைபெற்ற இரண்டாவது மகாசபைக் கூட்டத்திலேயே சைவபரிபாலனசபை என அழைப்ப தெனத் தீர்மானிக்கப்பட்டது. இச்சபை உள்நாட்டு அறிஞர்களைக் கொண்டும், இந்தியாவிலிருந்து குறிப்பாகத் தமிழ்நாட்டு அறிஞர்களைக் கொண்டும் சைவப் பிரசங்கங்களை நடாத்தியது. ஓர் அச்சி யந்திரசாலையை அமைத்துப் பல்வேறு நூல்கள், பாடநூல்கள், பிரசுரங்கள் முதலியவற்றை வெளியிட்டது. இந்துசாதனம் என்ற தமிழ்ப் பத்திரிகையையும் இந்து ஓகன் (Hindu Organ) என்ற ஆங்கிலப் பத்திரிகையையும் வெளியிட்டு, சமய வளர்ச்சியை விரைவுபடுத்தியது. 1890இல் இச் சபையால் நிறுவப்பட்ட இந்துக் கல்லூரி இந்துக்களின் கல்வி, சமய வரலாற்றில் முக்கியத் துவமுடையதாக விளங்கியது. 1891இல் சிதம்பரத்தில் நடைபெற்ற மகாநாட்டில் ஈழத்து இந்துக்கள் சார்பாக சைவசபரிபாலனசபையினரே கலந்து கொண்டனர். அது மட்டுமன்றி இந்து சமயத்தின் பெருமையை உலகிற்கு எடுத்துக் காட்டிய சுவாமி விவேகானந்தரை ஈழத்துக்கு வரவழைத்து, அவரது கருத்துக்களை ஈழத்தவரும் நேரடியாக அறியும் வாய்ப்பினை இச்சபை ஏற்படுத்திக் கொடுத்தது. இவ்வாறு 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பரந்துபட்ட பணிகளை இச்சபை முன்னெடுத்து இந்துசமயத்தின் வாழ்வுக்கும் வளத்துக்கும் பங்காற்றிய பெருமை சைவபரிபாலன சபைக்குண்டு.

**கொழும்பு சைவ வாலிபர் தேர்ச்சிச் சங்கம்**

கொழும்பிலே ஸ்தாபிக்கப்பட்ட கொழும்பு சைவ வாலிபர் தேர்ச்சிச் சங்கம் ஆங்கிலம், தமிழ் முதலிய மொழிகளை விருத்தி செய்வதையும் சைவ சமயத்தைப் பலரும் அறியுமாறு செய்வ தையும் பிரதான நோக்கமாகக் கொண்டு செயற் பட்டதாக 19.08.1891இல் வெளிவந்த இந்து சாதனம் பத்திரிகையூடாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**விக்ரோறியா வாசிகசாலை**

ஈழம் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டிருந்த இக்கால கட்டத்தில் இங்கிலாந்தில் கொண்டாடப் படும் விழாக்கள் இங்கும் கொண்டாடப்பட்டன. விக்ரோறியா மகாராணி முடிசூடிய 50வது ஆண்டு நிறைவு விழா 20.06.1887 அன்று யாழ்ப்பாணத்தில் கோலாகலமாக நடத்தப்பட்டது. இவ் விழாவின் ஞாபகார்த்தமாகவே விக்ரோறியா வாசிகசாலை அப்புக்காத்து சி.நாகலிங்கம் தலைமையில் ஸ்தாபனமாகியது. 1895இல் இவ் வாசிகசாலை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு மாற்றப்பட்டது மின்றி, 1910ஆம் ஆண்டளவில் சைவ பரிபாலன சபை இதனைப் பொறுப்பேற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. இந்து சமய அங்கத்தவர்களைக் கொண்டிருந்தமையும் சைவசமய பரிபாலன சபையின் கீழ் இயங்கியமையும் இதனை ஒரு சமயச் சார்பான நிறுவனமாக வெளிக்காட்டினாலும், இதன் நோக்கம் இளைஞர்களிடையே உலகின் நவீன போக்குகளையும் சிந்தனைகளையும் தெரியப்படுத்துவதன் மூலம் சுபீட்சமான எதிர் காலத்தை உருவாக்குவதாக இருந்தது. இப் பின்னணியில் ஈழத்தில் வெளிவந்த பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகளோடு இந்திய மற்றும் பிறநாட்டுப் பத்திரிகைகள் சஞ்சிகைகளை வாசிக் கின்ற வாய்ப்புக் கிடைத்ததெனலாம். மேலும் இந்நிறுவனத்தின் வாயிலாக சொற்பொழிவுகள், விரிவுரைகள் முதலானவையும் நிகழ்த்தப்பட்டன. உதாரணமாக இந்துப் பெண்களின் கல்வி குறித்து B.A சண்முகமும், நெவின்ஸ் செல்லத்துரை இந்தியாவின் 3வது தேசிய காங்கிரஸ் குறித்தும் உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**சைவமகாசபை**

1890ஆம் ஆண்டளவில் மட்டுவில் க.வேற்பிள்ளையைத் தலைவராகக் கொண்டு இந் நிறுவனம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேலும் பன்னிரண்டு அங்கத்தவர்களையும் இச்சபை

கொண்டியங்கியதாக அறியமுடிகின்றது. சைவப் பிள்ளைகளுக்கெனத் தேவையான இடங்களில் பாடசாலைகளை ஸ்தாபிப்பது பிரசங்கிகளைக் கொண்டு சைவ சமயப்பிரசங்கங்களை நடத்துதல், துண்டுப்பிரசுரங்கள், பத்திரிகை முதலானவற்றை அச்சிட்டுச் சைவர்களிடையே வழங்குதல் போன்ற பணிகளை நோக்கங்களாகக் கொண்டு இச்சபை செயற்பட முனைந்தது.

இந்துசாதனம் பத்திரிகைக் குறிப்பின் பிரகாரம் சாவகச்சேரியில் சைவமகாசபையொன்று அமைக் கப்பட்டு அதன் மூலம் சைவப் பிரசங்கங்கள் செய்யப்பட்டமையினால் கிறிஸ்தவப் பாடசாலை களுக்கு மாணவர்கள் செல்லாதவாறு தடுக்கப் பட்டனர் என்பதையும், இதனால் சைவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி பாதிரிமார்கள் துவைனம் என்ற அரச அதிபருக்கு கடிதம் எழுதியதையும் அறிந்துகொள்ள முடிகின்றது. இதிலிருந்து சைவ மகாசபை இந்துக்களுடைய நிறுவன அமைப்பு, சமகால இந்து சமய வளர்ச்சி முதலானவற்றில் முக்கிய பங்கு வகித்ததென்பதைக் கண்டு கொள்ளலாம். ஆயினும் இந் நிறுவனம் பற்றி மேலதிக தகவல்களைப் பெறக்கூடிய சான்றுகள் கிடைக்கப் பெறவில்லை.

**இந்து இளைஞர் சங்கம்**

கிறிஸ்தவர்களின் சமயப் பரப்பு நடவடிக்கை களின் விளைவாக இந்துக்களிடையே தோற்றம் பெற்ற நிறுவன அமைப்புக்களில் ஒன்றாக இந்து இளைஞர் சங்கம் விளங்கியது. கத்தோலிக்கம் மற்றும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதமாற்ற நடவடிக்கைகளில் இளைஞர்களை மதம் மாற்றுவது முன்னிலை பெற்றிருந்தது. இதன் பொருட்டு முறையே கத்தோலிக்க இளைஞர் சங்கம் (1872), கிறிஸ்தவ இளைஞர் சங்கம் (1884) முதலியன உருவாக்கப்பட்டன. தம் மதங்களுக்கு இளைஞர் களை இணைத்துக் கொள்வதோடு, அம் மதங் களில் பற்றுடனும், ஒழுக்கத்துடனும் வாழ்வதற் குரிய நடவடிக்கைகளையும் இச் சங்கங்கள் மேற்கொண்டன.

கிறிஸ்தவக் கல்வி நிறுவனங்களிலும் மற்றும் மதமாற்ற மையங்களிலும் மதமாற்றம் நிகழ்வதைத் தடுப்பதற்கும், கடவுள் நம்பிக்கை அற்றவர்களாக மாறுவதைத் தவிர்ப்பதற்கும் அமைப்பொன்று தேவையென்பதை இந்துக்கள் உணர்ந்து கொண்டனர். இக்காலத்தில் ஆங்கிலக் கல்வி கற்றவர்கள் இந்துக் கிரியை முறைகளைப் பின்பற்றவோ அவற்றை முறையாக அறிந்து கொள்ளவோ அனுமதிக்கப்படவில்லை. கிரியை கள், அவற்றின் தத்துவம், விளக்கம் முதலான வற்றை அறிந்து கொள்வதிலும் அலட்சியமாக இருந்தனர். இப்பின்னணியில் இந்து இளைஞர் சங்கம் உருவாக்கப்பட வேண்டியது அவசியமாக விருந்தது. இக்கால இந்துசாதனம், இந்து ஓகன் பத்திரிகைகள் இது பற்றிய கருத்துக்களை முன் வைத்துள்ளன.

கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ இளைஞர் சங்கங்கள் ஈழத்தின் தென்பகுதி பௌத்தரிடையேயும் தாக்கத்தை ஏற்படுத்தி யமையால் அவர்களும் 1898இல் பௌத்த இளைஞர் சங்கமொன்றைத் தோற்றுவித்தனர். இந்துக்களின் தாயகமான இந்தியாவிலும் இந்து இளைஞர்களுக்கென ஓர் அமைப்பு இயங்கியது. இவையும் ஈழத்து இந்து இளைஞர் சங்க உருவாக்கத்துக்கு உந்துதலளித்தனவெனலாம். 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இச் சங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டாலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே இது சாத்தியமானது. 1903 ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஒன்பதாம் திகதி இந்து இளைஞர் சங்கம் நிறுவப்பட்டது. 1904 ஆம் ஆண்டு ஆவணி 27 ஆம் திகதி வெளிவந்த இந்து ஓகனில் இச் சங்கத்துக்குரிய யாப்பு வெளியிடப்பட்டுள்ளது. நிர்வாக அமைப்பு முறை, செயற்பாடுகள் முதலானவற்றை அறிந்து கொள்ளலாம்.

**வைதீக சைவபரிபாலனசபை**

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஏற்பட்ட சைவமறுமலர்ச்சி, அந் நூற்றாண்டின் பிற்பகுதி யிலும் தொடர்ந்ததை அவதானிக்க முடிகின்றது. ஆறுமுக நாவலரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட தாகக் கருதப்படும் சைவமறுமலர்ச்சி, அவரது மறைவினை அடுத்து அவரது மாணவர்களாலும் அபிமானிகளாலும் தொடர்ந்தும் முன்னெடுக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. இவற்றின் விளைவாக 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பல இந்துசமய நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. இவற்றில் ஒன்றே வைதீக சைவ பரிபாலனசபை யாகும். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்துசமய வளர்ச்சியின் பொருட்டுப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்ட அறிஞர்களின் பங்களிப்புடன் இந் நிறுவனம் தோற்றம் பெற்றமை

சுட்டிக் காட்டத்தக்கதாகும். சைவ பரிபாலன சபையிலும், வைதீக சைவபரிபாலனசபையிலும் பிரதான நிர்வாகியாக இருந்த த.கைலாசபிள்ளை,

> **("சைவர்களை ஒரு தலைமைத்துவத்தின் கீழ் ஒருங்கு கூட்டும்) உத்தேசத்தை இங்குள்ள சைவ பரிபாலன சபை, விவேகானந்த சபை முதலான சபைகள் மூலமாக முடிக்கக் கூடாதா? இதற்கென்றொரு சபை ஏற்றுக் கெனின், அந்த சபையார் தாங்கள் தொடங்கிய உத்தேசங் களையே முடிக்கக் கூடாமல் வருத்த மடையும் போது இதையுஞ் செய்யச் சொன்னால் எப்படிச் செய்வார்கள்?"**

என வினாவுவது வைதீக சைவ பரிபாலனசபையின் தோற்றத்திற்கான பின்னணியை விளக்குவதாக வுள்ளது. அது மட்டுமன்றிப் பல சபைகள் இருந்த போதும் இந்து சமய வளர்ச்சியின் பொருட்டு இன்னும் சில சபைகள் தேவையாக இருந்தன என்பதையும் இதிலிருந்து ஊகிக்க முடிகின்றது.

வைதீக சைவபரிபாலனசபை சைவ பரிபாலன சபையின் சில பணிகளை நிறைவேற்ற முற்பட்ட தையும் அச்சபையின் பெயரினை இறுதியாகக் கொண்டிருப்பதும் கவனிக்கற்பாலது. வைதிக சைவ பரிபாலன சபை 1904ஆம் ஆண்டு வைகாசி மாதம் 23ஆம் திகதி வண்ணார்பண்ணை கிழக்கில் அமைந்திருந்த கண்மணி அம்மாள் சத்திரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிறுவனம் பெண் பாடசாலைகள் அமைத்தல், வைதிக சைவ சாஸ்தி ரங்கள் யாவுமடங்கிய புத்தகசாலை நிறுவுதல், வைதீக சைவ பரிபாலினி என்னும் பத்திரிகை வெளியிடுதல், பிரசாரகர்களையும் ஓதுவார் களையும் நியமித்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்தது.

இந்நிறுவனத்தின் உள்ளார்ந்த பிரிவுகளைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம் :

| | | |
|---|---|---|
| மகாசபை | - | (இலங்கை முழுவதிலுமுள்ள சைவர் அடங்கியது) |
| சிரேஷ்ட சபை | - | (மாவட்ட ரீதியாக அமைத்தல்) |
| உபசபை | - | (மாவட்டங்களில் உள்ள பகுதிகளில் உதாரணமாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தென்மராட்சி, வடமராட்சி போன்றவை) |
| கோவிற்பற்று சபை | - | (கோவிற்பற்று என்னும் பிரிவுகளுக்குரியவை) |
| கிராமசபை | - | (கிராமங்களுக்குரியவை). |

இந்தியாவிலும் இவ்வாறான பிரிவுகள் ஏற்படுத் தவும் திட்டமிடப்பட்டு, அதற்குரிய விக்கியாபனம் "முந்துமின்!! முந்துமின்!!" என்ற தலைப்பில் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டதையும் அவதானிக்கலாம்.

**விவேகானந்த சபை**

இந்தியாவில் பிறந்து, அமெரிக்காவில் சர்வ சமய மகாநாட்டில் உரையாற்றியதன் மூலம் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்து சமயத்தின் பெருமையை உலகறியச் செய்தவர் சுவாமி விவேகானந்தர். இந்த அறிஞர் அமெரிக்காவில் ஆற்றிய உரையை அடுத்து அவரை முதன் முதலாக வரவேற்கும் பேறினை ஈழம் பெற்றுக் கொண்டது. சுவாமி விவேகானந்தர் தனது உரைகள், நடவடிக்கைகள் மூலம் இந்துசமயத்தை வீறுடையதாக்கினார். ஈழத்தின் தென்பகுதியிலும், வட பகுதியிலும் ஆற்றிய உரைகளால் சமய எழுச்சி ஊக்குவிக்கப்பட்டது. சைவ சமயத்தையே முதன்மையப்படுத்திய ஈழத்தவர்கள் விவேகானந் தரின் வருகையுடன் இந்து என்ற பெரும் அமைப் பினை உள்வாங்கிக் கொண்டனர். இதனைக் கைலாசபதி பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :

> **"யாழ்ப்பாண இந்துக்களிற் பெரும்பான்மை யினர் சைவர்கள், சைவப்பற்று மிகுந்தவர்கள். சங்கர வேதாந்தத்தின் மாயாவாதத்தைத் தகர்ப்பதில் மகிழ்ச்சி கொள்பவர்கள். ஆனால் மெல்ல மெல்ல வேதாந்தத்தை ஒப்புக் கொள்ள முடியாமற் போனாலும் பொறுத்துக் கொள்ளத் தொடங்கினர். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானாற் சுவாமி விவேகானந் தரின் போதனைகளும் இராமகிருஷ்ண இயக்கத்தின் செய்தியும் இலங்கைத் தமிழ் இந்துக்களை வேதாந்தத்தை ஒப்புக் கொள்ளச் செய்யா விட்டாலும், பெரும்பாலா னோரின் குறுகிய நோக்கையும் கொள்கைப் பிடிவாதத்தையும் தளரச் செய்தது."**

சுவாமி விவேகானந்தர் 1902ஆம் ஆண்டு ஆடி மாதம் 4ஆம் திகதி சமாதியடைந்தார். இதனை யிட்டு இந்துசாதனம் எழுதிய ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு அமைகின்றது.

> **"..... அவருடைய ஒப்பற்ற பேச்சாற்றலாலும் சமய உணர்வின் சுடரொளியாலும் இந்துக்கள்**

**மட்டு மல்லாது கிறிஸ்தவர்களும் கூடியிருந்த அவையோரை உணர்ச்சி பொங்க சிலிர்க்க வைத்தது. சுவாமிஜீயின் வருகை இங்கு இந்து சமய மறு மலர்ச்சிக்குரிய நிகழ்வாக என்றென்றும் நினைவுக்குரியது"**

சுவாமிகளது வருகை ஈழத்தில் ஏற்படுத்திய தாக்கத்தினை விளங்கிக் கொள்ள மேற்கூறிய கருத்துக்கள் துணை செய்கின்றன. இப் பின்னணியில் அவர் சமாதியடைந்து ஒன்பதாவது நாளன்று கொழும்பு விவேகானந்த சபை தோற்றுவிக்கப் பட்டது. 1902ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 05ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் விவேகானந்த சபை உதயமானது இவை பெரும்பாலும் இந்து இளைஞர் அமைப்புக்களாகச் செயற்பட்டு, பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தன.

சைவசமய மறுமலர்ச்சியின் பொருட்டு நாவல ரால் தோற்றுவிக்கப்பட்ட சைவநிறுவனங்களை அடுத்து, இந்து சமயத்தைப் பேணிப் பாதுகாத்து, வளர்ச்சியடையச் செய்வதற்கு வேறும் பல இந்து நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இவற்றின் வாயிலாக ஈழத்து இந்துக்களிடையே சமய ஒற்றுமை, சமய உணர்வு, சமயத்தில் பற்று போன்றன ஏற்படுத்தப்படலாயின. குறிப்பாக அக் காலத்தில் கிறிஸ்தவத்தின் செல்வாக்கிலிருந்து இந்து சமயத்தை மீட்டெடுப்பது இந்நிறுவனங்களின் தலையாய பணியாக இருந்தமை குறிப்பிடத் தக்கது. நிர்வாகக் குறைபாடுகள், நிதிப் பற்றாக் குறை, அறிஞர்களிடையே கருத்து முரண்பாடுகள் முதலியன இந்நிறுவனங்களில் காணப்பட்ட போதும் சமய வளர்ச்சியின் பொருட்டு தம்மால் இயன்ற பணிகளை முன்னெடுத்தமை சிறப்புக்குரிய தாகும். இந்து நிறுவனங்கள் மேற்கொண்ட சமய நடவடிக்கைகள் 19ஆம் நூற்றாண்டில் மட்டுமன்றி 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பல்வேறு நிலைகளில் சமய வளர்ச்சியை ஏற்படுத்தக் காரணமாக இருந்தன. இவ்வகையில் வைதீக சைவ பரிபாலனசபை, விவேகானந்தசபை போன்ற வற்றின் பணிகள் சுட்டிக்காட்டத்தக்கவையாக அமைகின்றன. சுருங்கக் கூறின் 19ஆம் நூற்றாண்டில் இந்து சமய நிறுவனங்கள் சமய வளர்ச்சியில் பிரதான பங்கு வகித்தனவெனக் கூறலாம்.

## உசாத்துணை நூல்கள்


- த.கைலாசபிள்ளை, ஆறுமுகநாவலர் சரித்திரம் (1955)
- இந்து தர்மம் 1992-93
- இந்து தர்மம் 1993-94
- இந்துசாதனம் பத்திரிகை.
- வைதீக சைவ பரிபாலினி பத்திரிகை
- Hindu Organ
- Selected speeches of Ponnampalam Ramanathan in the Legislative Council of Ceylon 1876 to 1894
- Kumari Jeyawardene, Nobodies to Sombodies, the Rise of the Coloniel Bourgeoisie in SriLanka (2000).


**குறிப்பு :** ஈழத்து சைவசமய மறுமலர்ச்சி ஆறுமுகநாவலரால் முன்னெடுக்கப்பட்ட போது 'சைவம்' என்பதே முன்னிலைப்படுத்தப்பட்டது. அவரது மறைவினை அடுத்து வந்த காலகட்டத்தில் (1879) விவேகானந்தர் வருகை முதலிய காரணங்களால் 'இந்து' என்பது முன்னிலைப்படுத்தப்படுவதைக் காணலாம். ஆயினும் இவ்விரு சொற்களும் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பயன்படுத்தப்பட்டது. சைவ பரிபாலனசபை, இந்து சாதனம், இந்துக் கல்லூரி, வைதீக சைவ பரியாலனசபை போன்றவற்றில் இவ்விரு பெயர்களும் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே இக்கட்டுரையில் நாவலரோடு தொடர்புபடுத்துமிடத்து 'சைவம்' என்றும், அவருக்குப் பின்னர் வந்தவர்களோடு தொடர்புபடுத்துமிடத்து 'இந்து' என்றும் குறிப்பிடப்படுகின்றது.